# அவுத்திரேலியா

# தமிழ்மொழித் தேர்வு

**Reading Time: 15 minutes**
**Writing Time: 90 minutes**

## வளர்நிலை 5

## அரை ஆண்டுத் தேர்வு
## 2007

சுட்டெண் **(Index) :** | | | | | | | |

---

**Directions to Students**

**Materials**
Question and answer booklet of 5 pages.
Working space is provided throughout this booklet.

**The Task**

This examination of two sections.
Section A (Multiple Choice) and Section B (Short Answer)
Answer **all** question from Section A. Section A is worth **30 marks.**
Answer **all** questions from Section B. Section B is worth **70 marks**.
There are a total of 100 marks available.
The marks allocated to each part of each question appear at the end of each part.
Written responses should be in the language stated by the question.

The purpose of the exam is to assess your language skills and your knowledge in this language. Please answer all questions to the best of your ability and knowledge through what you have learnt at school and in general.

அரையாண்டுத் தேர்வு | தமிழ் மொழி | வகுப்பு 05 | 07-07-2007

பன்முகதேர்வு வினாக்கள்; **Section A** வருடம்: 05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பொற்காலம் என்பதைப் பிரித்து எழுதினால் -----------<br>1. பொ+காலம் 2. பொன்+காலம் 3. பொற்+காலம் 4. பொற்க்+காலம் | 1 | 2 | 3 | 4 |
| 2. | நான் கோவிலுக்கு -----------<br>1. போனேன் 2. போகிறாள். 3. போனேன். 4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3. | அன்னையைப் போல் ஒரு தெய்வம் ---------<br>1. நல்லது 2. உண்டு 3. நன்று. 4. இல்லை | 1 | 2 | 3 | 4 |
| 4. | தாமரை மலர் --------------- வாழும்<br>1. நிறம் 2. நீரில் 3. மனம் 4. குணம் | 1 | 2 | 3 | 4 |
| 5. | அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். பிதா என்பது<br>1. தந்தை 2. அக்கா 3. அன்னையும் 4. அப்பாவும் | 1 | 2 | 3 | 4 |
| 6. | புதிய என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. விருப்பு 2. பழைய 3. பெரிய 4. செயற்கை | 1 | 2 | 3 | 4 |
| 7. | அரசனின் எதிர்ப்பால் சொல் ---------------.<br>1. மனைவி 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8. | நான் பாட்டுப் பாடுகிறேன். நீயும் பாட்டுப்<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | விழா என்பதன் ஒத்த சொல் -----------.<br>1. கொண்டாட்டம் 2. வணக்கம் 3. திருமணம் 4. கலைவிழா | 1 | 2 | 3 | 4 |
| 10. | சகோதரி என்பது ---------------.<br>1. மாதா 2. கடவுள் 3. தம்பி 4. தங்கை | 1 | 2 | 3 | 4 |
| 11. | புதுமைப்பெண்ணாக புறப்படவேண்டும் என்று கூறியவர் -------.<br>1. வள்ளுவர் 2. பாரதியார் 3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | இளமையில் ---------- சிலையில் எழுத்து<br>1. அழகு 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | இலக்கம் என்பதன் ஒத்த சொல் ------------.<br>1. எண் 2. வானம் 3. முகில் 4. எண்கள் | 1 | 2 | 3 | 4 |
| 14. | உயர்வு இதன் எதிர்ச்சொல் -------------.<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4. தாழ்வு | 1 | 2 | 3 | 4 |
| 15. | மிகவும் உயரமாக வளரும் மரம் -------------.<br>1. தென்னை 2. வாழை 3. பூமரம் 4. மாமரம் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | ------------ புத்தகம் படிக்கிறோம்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் பந்து கீழே -----------<br>1. விழுந்து 2. விழுந்தது 3. விழுந்த. 4. விழு. | 1 | 2 | 3 | 4 |
| 18. | வருடம் முடிவது எந்த மாதத்தில்?<br>1. தை 2. மார்கழி 3. மாசி 4. ஆடி | 1 | 2 | 3 | 4 |
| 19. | மாணவனின் எதிர்ப்பால் சொல் ------------.<br>1. தலைவி 2. சகோதரி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | பறவை உயர எழுந்து ------------- பறந்தது.<br>1. தரையில் 2. நீரில் 3. வானத்தில் 4. காற்றில் | 1 | 2 | 3 | 4 |
| 21. | ஆடிப்பூரம் திருவிழா வரும் மாதம் ----------.<br>1. தை 2. ஆடி 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22. | கொக்கு பொதுவாக நிற்கும் இடம் --------------.<br>1. வீட்டுக்கூரை 2. கடற்கரை 3.மரம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 23. | அவன் வேலைகளை ----------------<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தான். | 1 | 2 | 3 | 4 |
| 24. | நகரம் என்பது --------------.<br>1. கிராமம் 2. நாடு 3. பட்டணம் 4. வீடு | 1 | 2 | 3 | 4 |
| 25. | இருபத்திரண்டின் அடுத்த எண் ---------------.<br>1. 30 2. 20 3. 23 4. 22 | 1 | 2 | 3 | 4 |
| 26. | வினாவிற்கு ஏற்ற --------- எழுது<br>1. கேள்வி 2. விடை 3. பேச்சு 4. பதில் | 1 | 2 | 3 | 4 |
| 27. | நல்ல நூல்களை படி. நூல்களுக்கு ஒத்த சொல் -----------.<br>1. நூல்கள் 2. பாடங்களை 3. புத்தகங்களை 4. நாவல்களை | 1 | 2 | 3 | 4 |
| 28. | நாங்கள் நாளை பாடசாலைக்கு --------------<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வருவோம் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 29. | ------------------ இன்று வருகிறாரகள்.<br>1. அது 2. அவை 3. அவரகள் 4. அவன் | 1 | 2 | 3 | 4 |
| 30. | ---------- கல்<br>1. இம்மையில் 2. இளமையில் 3. வறுமையில் 4.முதுமையில் | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

**வினாக்கள்** **வருடம்: 05**

**1.பின்வரும் பந்தியை வாசித்து, கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

ஆப்பிள் உடலுக்கு நலம் தரும் சத்துள்ள பழங்களுள் ஒன்று. இதில் நம் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களும் அடங்கியுள்ளன. உலகில் பலவகையான ஆப்பிள்கள் உள்ளன. இவை வடிவம், சுவை நிறம், மணம் ஆகியவற்றால் வேறுபடுகின்றன. சிலவகை சிவப்பு, பச்சை மஞ்சள் நிறங்களில் இருக்கும் வேறுசில இம்மூன்று நிறங்களும் கலந்ததாக காணப்படும். இவை நன்றாக வளர வெப்பமும் குளிரும் சமஅளவில் இருக்க வேண்டும். ஆப்பிள் விதையிலிருந்து செடிகளை உண்டாக்கலாம். ஆனால் மரமாக அது வளர்ந்து பலன் கொடுக்க அதிக நாளாகும். எனவே சுவையான ஆப்பிள் ஒட்டுமரத்திலிருந்துதான் உற்பத்தி செய்யப் படுகின்றன.. ஓர் அப்பிள் மரத்தின் சிறு கிளையை வெட்டி மற்றோர் இளம்செடியின் தண்டோடு ஒட்டி இணைப்பார்கள். இவ்வாறு வளரும் ஒட்டுமரம் சத்து நிறைந்த பெரிய பழங்களை கொடுக்கிறது. ஆப்பிள் பழத்திலிருந்து குடிபானங்கள், பாகு, சாறு போன்றவை தயாரிக்கப் படுகின்றன.

ஆப்பிள் ஏன் சிறந்த பழமாக கருதப்படுகின்றது?

---

ஆப்பிள் மரம் எவ்விடங்களில் நன்றாக வளரும்?

________________________________________________

விதையிலிருந்து செடிகளை உண்டாக்கும் முறை ஏன் சிறந்தது அல்ல?

________________________________________________

ஒட்டு மரம் என்றால் என்ன?

________________________________________________

ஆப்பிள் பழத்திலிருந்து என்ன தயாரிக்கப்படுகிறது?

________________________________________________

(10 புள்ளிகள்)

**2. பொதுஇடங்களை (உ-ம்: புகைவண்டி நிலையம்) எப்படி சுத்தமாக வைத்திருக்கலாம் என எழுதுக. (50- 70 சொற்கள்)**

(10 புள்ளிகள்)

**3. கீறிட்ட இடத்தில் பொருத்தமான வினைச் சொல்லை வைத்து எழுதுக.**

நீ எழுதிய பாடல் நன்றாக ------------------------------------------------..

நான் காலையில் எழுந்து உடற்பயிற்சி ------------------------------------------------

அவர்கள் பாடலை கேட்டு --------------------------------------------------------

அவன் பாடிய பாடலைக்கேட்டு அனைவரும் -------------------------------------------

மருத்துவர் நோயாளியைப்----------------------------------------------------

அந்த ஆட்டின் வால் மிகவும் ------------------.---------------------------------------

அந்த பிள்ளை நீண்ட நேரம் விளையாடிவிட்டு ----------------------------------------.

நத்தை மிகவும் மெதுவாக ----------------------------------------------

உடைந்த கண்ணாடியை உன்னால் ஒட்ட -----------------------------------------?

அவன் தன் நண்பனுக்கு வாழ்த்துமடல் -----------------------------------------

(10 புள்ளிகள்)

**4. பின்வரும் படங்களை வைத்து வசனங்களை அமைக்க.**



பள்ளிச் சிறுவன் கால்வாயில் நாய்க்குட்டியை கண்டெடுத்தல்



நாய்க்குட்டிக்குப் பால் கொடுத்து வளர்த்தல்



திருடனைப் பார்த்து நாய்க் குட்டி குரைத்தல்



நாய்க்குட்டியைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுதல்

(10 புள்ளிகள்)

5. மாறிக்கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி சரியான வசனத்தில் அமைக்க.

பாடசாலையில் - ஒரு - நடந்தது - கலைவிழா

வந்திருந்தார்கள் - பலர் - அந்த - கலைவிழாவுக்கு

முழுவதும் - அலங்கரித்து - மண்டபம் - இருந்தார்கள்

ஓடி - விளையாடிக் - மாணவர்கள் - கொண்டிருந்தார்கள்.

நிறைய - கூட்டம் - மண்டபத்தில் - கூடியிருந்தன -

(10 புள்ளிகள்)

6. நீர் சென்று பார்த்த கோவில் திருவிழா பற்றி 10 வசனங்கள் எழுதுக

(10 புள்ளிகள்)

7. **பொழுது** என்னும் சொல்லை சேர்த்து இருவசனங்களை ஒரு வசனமாக்குக

உ.ம்: நான் பள்ளி சென்றேன். மழை பெய்யத் தொடங்கியது

நான் பள்ளிக்கு சென்று கொண்டிருந்த **பொழுது** மழை பெய்ய தொடங்கியது

நான் வேலை செய்து கொண்டிருந்தேன். என் அண்ணா அங்கே வந்தார்.

அவள் நடந்து சென்றாள். ஒரு பஸ்வண்டி வந்தது.

நண்பர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். மணி அடித்தது.

செல்வி காலையில் எழுந்தாள். அம்மா கதவை தட்டினார்.

நான் வெளியே பார்த்தேன். வெளிச்சம் நன்றாக தெரிந்தது

(10 புள்ளிகள்)

# தமிழ்

யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு
நாமமது தமிழரென கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுர தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் -

**தேர்வு விபரங்கள்**

அவுத்திரேலியா இறுதியாண்டுத்தேர்வு - மார்கழி முதல் வாரம் 2007

அனைத்துலக இறுதியாண்டுத்தேர்வு - வைகாசி முதல் வாரம் 2008